# உண்மைகளை அறியுங்கள்

## அன்புள்ள முதலீட்டாளரே,

கடந்த பல ஆண்டுகளாக, நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் (NSE) செக்யூரிட்டிகளில் ஆன்லைன் டிரேடிங்கை அனேகமாக நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் உங்களுக்கு அருகில் கிடைக்குமாறு விரிவாக்கியுள்ளது. வாடிக்கையாளர்களின் நலன்களைப் பாதுகாக்க உதவுவதில் எங்களுக்கு கிடைத்த அனுபவத்தால், நீங்கள் பின்பற்றவேண்டிய சிறந்த நடைமுறைகளை நாங்கள் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம் இந்த வழிகாட்டல்கள் உங்கள் குறைகளை பெருமளவு தீர்க்கும் என்பதோடு, எக்ஸ்சேஞ்சால் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளுக்கு NSE ஆல் உருவாக்கப்பட்ட முதலீட்டாளர் பாதுகாப்பு நிதியின் கீழ் பாதுகாப்பும் கிடைக்கிறது.

## NSE-யில் வர்த்தகத்தில் ஈடுபட பாதுகாப்பான வழிமுறைகள்

செபியில் பதிவுசெய்துள்ள NSEன் புரோக்கர்கள் அல்லது அவர்களது சார்ந்துள்ள செபியில் பதிவு செய்துள்ள சப்-புரோக்கர்களிடம் மட்டுமே செக்யூரிட்டிகள் வாங்குங்கள், விற்பனை செய்யுங்கள். அனைத்து NSE புரோக்கர்களும் மற்றும் அவர்களின் சப்-புரோக்கர்களும் அவர்கள் வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் ஒவ்வொரு பகுதியிலும் அவர்களின் செபி பதிவு சான்றிதழ் மற்றும் அவர்களின் பதிவு அலுவலகம், அவர்களின் செபி பதிவு பெயர் போன்றவற்றை அனைவரின் கண்களிலும் படுமாறு வைக்க வேண்டும். NSE புரோக்கர் என யார் சொன்னாலும் இந்த விபரங்களை பார்த்து நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



''க்நோ யுவர் க்ளையண்ட்'' படிவத்தில் உங்களைப்பற்றிய அனைத்து தகவல்களையும் மற்றும் ''கிளையண்ட்/புரோக்கர்'' ஒப்பந்தத்தில் நீங்கள் கையெழுத்திட்டிருப்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.



நீங்கள் பங்குகளை வாங்க அல்லது விற்க ஓர் ஆர்டர் செய்யும்போது, ஒரு தனித்தன்மையான ஆர்டர் நம்பர் உருவாக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது விற்பனை நடவடிக்கை ஆகும்போது, ஒவ்வொரு வணிக நடவடிக்கைக்கும் ஒரு தனித்தன்மையான ட்ரேடு நம்பர் உருவாக்கப்படும். கான்ட்ராக்ட் நோட்களில் இந்த நம்பர் உள்ளதா எனப்பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளவும். இந்த நம்பர்களை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்.



உங்கள் புரோக்கரிடம் இருந்து பரிவர்த்தனை முடிந்த 24 மணி நேரத்திற்குள் கான்ட்ராக்ட் நோட்டைப் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

பரிவர்த்தனைகளில் உண்மை நிலையை பரிசோதிக்க NSE வெப்சைட்டை லாக்-ஆன் செய்து, NSE ஆல் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள URL ஆன் www.nseindia.com/content/equities/eq_trdverify.htm பகுதிக்குச் சென்று வணிகத்தைப்பற்றி சரிபார்த்துக் கொள்ளும் வசதியைப் பயன்படுத்துங்கள். உங்கள் புரோக்கரிடம் கிடைக்கும் கான்ட்ராக்ட் நோட்டில் சம்பந்தப்பட்ட தகவலை நிரப்புங்கள். இந்த வசதி அனைத்து சரியான பரிவர்த்தனைகளையும் உறுதிசெய்கிறது. மேலும். பரிவர்த்தனை செய்த பின் 5 நாட்கள் வரை இந்த வசதி கிடைக்கும்.



உங்கள் நடவடிக்கைகளுக்காக உங்கள் புரோக்கருக்கு பங்குகளை அளிக்கும்போது, உங்கள் புரோக்கரின் குறிப்பிட்ட கணக்கில் சேருமாறு டெலிவரி குறிப்புகள் அளிக்கப்படுகிறதா எனப் பார்த்து உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களுக்காக வாங்குவதன் ஒரு அங்கமாக உங்கள் புரோக்கரிடம் பணத்தை செலுத்த நீங்கள் விரும்பினால், உங்கள் வங்கி கணக்கிலிருந்து கோடிட்ட காசோலைகளாக உங்கள் புரோக்கரின் பெயரில் கொடுங்கள் அப்படி கொடுக்கப்படும் பெயர் புரோக்கரின் இடத்தில் காணப்படும் கான்ட்ராக்ட் நோட்/செபி சான்றிதழில் குறிப்பிட்டுள்ள பெயரில் கொடுக்கப்பட வேண்டும்.



ரொக்கமாக கொடுப்பதைத் தவிருங்கள். ஏனெனில் எந்த விதத்திலும் தணிக்கை என எதுவும் கிடையாது ரூ. 20,000க்கும் மேலான தொகை எனில், நீங்கள் காசோலை மூலமாக மட்டும்தான் கொடுக்க வேண்டும்.

வர்த்தகம் தீர்வுபெற்ற நாளிலிருந்து ஒரு அலுவல் நாளுக்குள் உங்கள் பரிவற்த்தனைகளுக்காக உங்கள் புரோக்கரிடமிருந்து நீங்கள் பணம் பெறுவதை / டெலிவரி பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

நீங்கள் உங்கள் புரோக்கரிடமிருந்து அடிக்கடி இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு ஒரு முறை கணக்கு அறிக்கைகள் பெற வேண்டும். ஆனால் நீங்கள் உங்கள் கணக்குகளை உடனே சரிபார்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் பெயரில் வணிகப்பரிவர்த்தனைகள் செய்யாமல் இருந்தால் உங்கள் குடும்பகுறுப்பினர்களின்/நண்பர்களின் வங்கி கணக்குகளில் இருந்து காசோலைகள் கொடுக்காதீர்கள். அதேபோல, டிமாட் டெலிவரி இன்ஸ்டரக்‌ஷன் சிலிப் உங்கள் டிமாட் கணக்கிலிருந்து கொடுக்கப்பட வேண்டும். வேறு எந்த குடும்ப உறுப்பினரின் கணக்கிலிருந்தும் கொடுக்கப்படக் கூடாது.



கான்ட்ராக்ட் நோட்டில் ஏதேனும் தவறுகள் இருந்தால், அதை உடனே எழுத்துபூர்வமாக புரோக்கருக்கு தெரிவித்து (புரோக்கரால் பெறப்பட்டதன் சான்றுடன்) அவர் உடனே அதை சரிசெய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒரு குறிப்பிட்ட காலவரம்புக்குள் (அதாவது 15 நாட்களுக்குள்) உங்கள் புகாரை படிவம் உங்கள் புரோக்கர் தீர்த்து வைக்கவிட்டால், அதை 'தி இன்வெஸ்டர் க்ரீவன்ஸ் செல் ஆஃப் தி எக்ஸ்சேஞ்ச்'க்கு தெரிவியுங்கள். புகார் மற்றும் அதைப் பதிவுசெய்யும் விபரம் NSE யின் இணையதளமான : www.nseindia.comல் URL : www.nseindia.com / content / assist / asst_invcentre.htm ல் பெறலாம்.





எக்ஸ்சேஞ்சில் ''இன்வெஸ்டர் க்ரீவன்ஸ் செல்''ல் புகாரைத் தெரிவிக்கும்போது கான்ட்ராக்ட் நோட்கள், பணம் செலுத்தியதற்கான சான்றுகள்/ஷேர்களின் டெலிவரி போன்ற ஆவண நகல்களை புகார் உடன் நீங்கள் வழங்க வேண்டும் என்பது மிக முக்கியம். இத்தகைய போதிய ஆவணங்கள் இல்லையென்றால், புகார்களைத் தீர்ப்பது கடினம் என்பதை தயவுசெய்து நினைவில் வைத்திருங்கள்.

***இந்த வழிகாட்டல்கள் உங்கள் நலனுக்காகவே.***
***தயவுசெய்து உங்கள் தகவலுக்காக இந்த விளம்பரத்தை கத்தரித்து வைத்துக் கொள்ளுங்கள்.***


நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்
''எக்ஸ்சேஞ்ச் பிளாசா'', பாந்திரா-குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்திரா (கி), மும்பை-400051
தொலைபேசி : 022-26598100-8114, ஃபேக்ஸ் : 022-26598120 மின் அஞ்சல் : cc_nse@nse.co.in
தயவுசெய்து எமது இணையதளத்திற்கு வருகை புரியவும் : www.nseindia.com பொது நலன் கருதி வெளியிடுவோர் NSE


A B and U-gf